சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மேலைச்சிதம்பர மென்கிற

பேரூர்மும்மணிக்கோவை

இஃது

கோயமுத்தூர் வித்துவான

கந்தசாமி முதலியாரவர்களால்

இயற்றப்பட்டு

கோயமுத்தூர்க்கலாநிதி

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது

விஷு௵ கார்த்திகைமீ

௧௮௮௧௵

சிவமயம்

பேரூர்மும்மணிக்கோவை

காப்பு

மூவுல கேத்தும் பேரூர் மும்மணிக்கோவைக்கெமது
நாவுலவி வாக்குவளநல்குமாற்—பூவுலகின
மாலடைந்த பாம்புருவ மாறறு பட்டியானை மலர்க்
காலடைந்து கைதொழுதக்கால்

மும்மணிக்கோவை

ஆசிரியப்பா

பூந்துணர் பொதுளிய தேந்தண் சோலை
சோலையி னகமெலாம வாலிதாம பொய்கை
பொய்கையி னயலெலாந் தையலரீட்டந்
தையலர் முகமுங் கையுமா மம்புய
மம்புயங் கண்டதி வெமபய மெய்திப்
பயமிகுத் துடையவக் கயனிடை யொளிப்ப
விடையிடை வதிவரு நடையுடை மீன்கணங்
கண்ணிணை நோக்கி யுண்ணணிவெருவி
விண்ணினிற் பாயவங் கண்ணிய பொழில் வயின்
வயின்ஞெருறுந் தண்ணிருன் முயன்றிடைதாக்கலி
னின்றேன் மாரி நன்றுபெய்மழையெனப்
பெய்துயர் பைங்கூ ழைதுற வளர்க்கும்
வளங்கெழுபண்ணை விளங்கிய சிறப்பி
னேரூர் நிகரிலாப் பேரூர்க் கிறைவ
புதம்பெறு மேலைச் சிதம்பர தேவ
வாஞ்சித்தலை தருங் காஞ்சி மாநதியாய்

பிறவாப்பேறு மிறவாபபேறும
பிறவா நெறிபபெயா பெறற விதுதலத்தி
லுறை வோா தமசகே 'புதவு முணமைக்குப்
பிறவாப்புளியொடு மிறவாப பனையைச்
சானரூப் நிறுவிய தோனறுல கேண்மதி
பிறந்துழிப் பிறவா திறந்துழி யிறவாது
நிறபுழி நில்லா துறபவக கடலிடை
மறகிளர்ந் தியககக கறங்கெனச் சுழலுறும்
யாறுடறியா மேறுட டவததால
விழியிலா வறியன கிழியீடு பெறறென
நறறல மிதில்வரப் பெறறன றுதலால்
வானோர்தமக்கும வழங்கிடற் கரிய
ஞானோபதேசமு நான பெறற குரித்தே. (க)

வெண்பா

உரியபல வானவர்தம் மூரும் வேற்றூரு
மரிய யனூர் தம்மூரு மந்தோ—பெரிய தென [ன்
வோ ரூனாயான் வேண்டே னென்றுர் புரமபொடித்தா
பேரூனாயா னடைந்த பின். (உ)

கலித்துறை

பினனப்பமெபல் சமயப்பிராந்தி பெரிதலைபப
வெனனப்ப னென்று யெனக்குயி ரொனகுருவென்றடைவே
பனனப்படும பல்பொருளாகும பேரூர்ப பசுபதியை
முனனப்படும்பொழுதெல்லாம் பொய்யாகி முடிந்ததுவே.

ஆசிரியப்பா

முடியாப் பொருளைப படியா லளப்பினு
மக்களை மாதரை யொக்கலை யளிப்பினுந்
தன்னியங் கலையெலாங் கொள்கிலனுவி
யுயிரோ கொண்டுறு மியமனூர் வந்துழிப்
பூசைககைப புக்க பாசிளங் கிளியென

நாச்செற் றறைய நீசசெறி வெட்டுந்
கணபணு சடைய னொண பணுசனை மேற
காலொடு கையை மேலெடுத் தியக்கவு
மவசமாயக் கிடக்குந் திவசம வநதிடுமே
லனுசே லெனபார் யாவரொணுசா
தளவிலாப பறபல வளமெலா மலிதலிற்
பேரூர் பேரூர் பேரூ ரிதுவெனப
போபெற றிலகிய வூரினுக் கிறைவ
விசையா லுருவுகொள பசசை வல்லிதாய்
நீககொளப படாதரு மாகசொணு கொமபே
நவியா வனபின மலாதரு மலரோ
பததியாம புலத்தில் விததிய விததே
நீயே யனுசலென பாயே லுபவேன
வேற்றோர் தெய்வங் கூற்றை யுதைத்தமை
நாட்டினில வழங்கக் கேட்டது மிலையா
லுலகுயிர்க கிடுககண பலசெயுங் கொடிய
காலனைக காமனை யால காலததை
வனறிற லடக்கிய நினறனிச் சரணே
சரணென வடைநதே னையை
வரண தாயெனை யாண்டஞ்சலென றிடற்கே. (௪)

வெண்பா

இடராம்பெருங்கடலை யேறினேமேறித்
திடராகும்பேரூரைச்சேர்ந்தோ—மடரும
முரசமபலமுழங்குமுன்றிலின் கண்மேவி
யரசம் பலங் கண்டோமால். (௫)

கலித்துறை

கண்டனை மென்மொழி வேலனைவாளவிழி நீள்கதலித்
தண்டன்ன பொற்குறங்காயிழையார் தழலுண்ணச்செல்
வண்டன்னபேதையையுய்யக்கொள்வாயகல்வானகத்தே[
பண்டனை மானவன்காணுத பேரூர்ப் பரம்பரனே. (௬

ஆசிரியப்பா

பரம்பர னுவந்து நிரந்தர மமர்தலி-
னொள்ளிய தாகிய வெள்ளியங் குன்றினை
யொப்பத் திகழ்ந்தே யப்பெயர் தாங்கிய
வெள்ளியங் கிரியும வள்ளி மணாளன
முருகற் கினிய மருதக் கிரியு
மரியயா கிரியொடு தெரிவை தன கிரியென
வைங்கிரி நடுவுட் டங்குபே ரூரிற்
கிட்டருந் தவமுடைய பட்டிமா முனிவனு
மாமுனிக் கணந்தொழுங் கோமுனிப் பனவனும்
காலவ னுதிய சிலருந் தொழுதிட
பங்குனியுத் திரத் திங்களின ஞானறு
பரசிய பெருமை யிரசித மன்றத் துண்
மேனிவந் தோங்கிய ஞானபீடிகையின
மாண்டகு நடநவி ருண்டவராய
தேவதேவ மூவருண முதல்வ
கால கால வாலமார்களத்த
காமநாச சோமவன யார்க்க
லோசனபாவ மோசன நீயே
யோரா னீழ லீரிரு யோகியர்க்
கியோகினையுணர்த்தும் யோகியா யமர்ந்து
கரமலர் காட்டிய பரமயோகத்தில்
வீற்றிருந்தருளிய வாற்ற லுணர்ந்து
மந்த யோகுசி தைந்திடல் குறியா
துன திரு முன்னர்ச் சென்றிடு மடியார்
பாடியு மாடியும் பல்தொழில் புரிகுவர்
நாடி டினவர்செய னன்று கொல்யானே
யகநோக்கிலனே யாயினு மாகச்
சகநோக் குடைய சழக்க னாதலின்
வந்திசை புரியாது சந்நிதி யடைந்துமிப்
பாடலே னாடலேன் பரவிலே னுவகை

4069

கூடிலேன் விம்முக் கொண் டகமலரோ
னுண்ணெகிழ்ந் துருகிக் கண்ணீர்சொரியேன்
கைதமலர் முகிழ்த்து மெய்வியர்ப் படையேன்
குற்றியென்ன வுற்றமர்ந்துறைகுவன
குற்றமாகக் கொள்ளலை யருளோ
முற்ற வழங்குதன் முறைமையென் றனக்கே. (எ)

வெண்பா

என்றன் கனவகத்திலேநந்தலையான் கண்ணுற்றே
னுன்றன் பேரூரோ துரையென்றே—னன்றதுவே
தானென்றான் மெய்ப்பொருளைச் சற்றுணர்த்திப்போதி
கானென்றான் போனான் கரந்து. [யென்றேன்

கலித்துறை

கரவறியாக் கல்விகல்லாதவன் கற்றநல்லவர்க்குத்
தரவறியாதவன் றளருண்டவன் சிவசந்நிதிக்கு
வரவறியாதவனு னுமுவந்து வணங்கினனல
குரவறியாச்செல்வர் வாழ்பேரூரருட் கோவிலையே. (க)

ஆசிரியப்பா

இலைமலி சோலை யுளவிரைநாடி
வெண்பணிலத்திற செம்முக மந்திகள்
பைந்தேன் பிழிந்துபொன்னிறப் பலவின்
கனியெதி ரேந்தக்காய்சினப் பேடை
கடுவன் வரவு தாழ்த்தமை நினைந்துச்
சிறிதுள முனியப்பெரிதகம் வருந்தித்
திணிந்த கோபந்தணிந்திடற் பொருட்டா
யேறிய காத லிரங்கியநெஞ்சமொடு
காலின் மிசையே தலைவைத்து வணங்குபு
நல்லன நவிற்றியவ் வல்லலை யகற்றிடு
மொப்பிலா வளஞ்சேர் திப்பியப் பேரூ
ராசவனத்தி லிரசித மன்றத்து

நட்டமிட் டருளியபட் டியெம் பெரும
பத்தருக் கெய்ப்பினில் வைத்திடு மைவைப்பே
யானொன் றுவேண்டுவ துளதே யதுதா
னுண்பன வல்ல வுடுப்பன வல்லக்
காண்பன வல்லபூண்பன வல்ல
வூர்ந்திடற் குரிய வூர்திகளல்லச்
சார்ந்திடற் குரிய தாவர மல்ல
விம்மையம்மை யும்மையு மலவா
லென்றிடு மிவற்றி னொன்று மற்றன்றென
நீதான் விழைந்த தியாதோ துதியெனிற்
பேரூர் நெஞ்சிற் பிரியா துறைதருஞ்
சீரூ ரடியா ரடியார்க் கடியார்
மன்னிய மனைசித் தகற்றிய
தென்னரும் பாதத் துகளதா லதுவே. (௧௦)

வெண்பா

துகளாக வெப்பொருளுந் தோற்றுமலமா
திகளான மாசேதுஞ்சேரா—வகழார்
பிறவா நெறிபடைத்த பேரூரை யண்ணிட்
பிறவா நெறிபடைத்த பேர்க்கு. (௧௧)

கலித்துறை

படையேறு தானைதற் சூழப்பல் செல்வம்படைத்துவெற்றிக்
குடையேறு மாமுடிக் கோமக னாவதிற் கொல்லைவெள்ளை
விடையேறு நம்பிதன் பேரூரி னூரா மலமேய்ந்துழலு
நடையேறு சூகரமாவது சாலநலந் தருமே. (௧௨)

ஆசிரியப்பா

நலம்பெறு குறுமுனி நிலம்படர்ந் தன்று
சையத் திழிந்து வையமேற் படர்தரு
பொன்னியென்னும் பொருவறு நன்னதி
சென்னி நாட்டிற் சேர்வகன் மன்னர்ப்

பனுடடினிலுந துனஞற்றினை யெலாம
வெனறுதன கீழப படுத தினறுயர் கொங்கிலும
வந்தனனெனச் சிலா முந்திவந்துமைசெயக்
கொங்கு நாடடிறகோர் பங்கமீ தாமெனக்
காஞ்சி சூழமருப்புக காஞ்சிநன னதிதான்
விடையுடைப் பகவன சடையினை நிகர்த்த
பச்சிம வெணகுவடுச்சிநினறிழிந்து
போதிவனத தரன பாதமபணிநது
திருவருளகைக்கொடுவருபொழுதெதிர்ந்த
பொனனியை நோககியெனனிவ ணுற்றனை
யெனைப போலீசன றனைப பூசித்திலை
வெளளியங் குனறிடையுள்ள நீயோ வலை
யரசக்கானமபரிசித்தா யலை
வியனுலகோாககுப பயனளித் தாயிலை
யெனபுறு பாவிதனறுனபொழித் தாயிலை
யகமெலி சோழன முகமளித் தாயிலை
காத்திற் றெருங்கினை கரகத் தடங்கினை
காக்கை காறள்ளிததாக்கவலைந்தனை
சத்தியந் தவறி யித்தலத் தடைந் தனை
கொண்டோன றுயரங் கண்டோட் டெடுத்தனை
நீயோ கொங்கெனுந் தூய்நிலத தடைகுவை
யெனனப பொருதுழிய பொனனி நாணெய் தி
யாண்மை விடுத்துக் கேண்மை கொணடளவளாய்க்
கொங்கிற் புகாது தங்கு சோணுட்டிடைச்
சென றுபலதல நன றுவணங்கியும
பற்பல பயிராயும் பிற்பட வளித்துந்
திருமலி காஞ்சியைப பொருவ லாமையினுற
சித்துரு வெடுத்தொளித் துறறனளபுணரியைப்
பரவுறுகாஞ்சி வரநதி யாயிடைப
பொன்னியைநொய்தாய்வெந்நிடக்காண்டலின
வையகமின்னுநொய்யலென்றோதிடு
மவ்விடை தணந்து செவ்விதிற்போந்து

விரிபுகழப பேரூர் பிரியா தமர்ந்தெனத்
திகழ்தருகாஞ்சி மகிழ் தருகரையிற்
போதியங்கான வளராதியமபகவ
மரகதம படர்வித் தருமப்பிளம்பே
யனபமொனபுருக்குமினபவாரிதியே
வழக்கொனறுன்பாறகிளககுத லுளதது
தேவரும புகழதருநாவலூர நமபியைத்
தொணட னிவனெனப பண்டுநீவழககிட
வெறுததப் பெரியோனமறுத்திட விடாது
மூததவோலைகைச சாதநவைகாட்டி
யடிமைபடைத்து நெடிதுசிறநதனை
தொணடாயெனனைக்கொண்டருளிலையேற்
றொணடர்தந்தொணடாய்கொணடருளெனவே
யானெயிரபபவு மேனெறுகொளகிலை
கேளார்போலவாளாவிருந்தனை
மிச்குயர்நீயோபக்கவாதியுமலை
யெனவயினினக்கோ வனமமாதிகளிலை
யெனனேகாரணமதனு
லெனனையு மடிமைகொள் ளெனனநின் றிடலே.

வெண்பா.

என்னே புதுமையிஃதெல்லோருங் காண்மின்க
டனதாம்பேரூச் சபைநடுவே—யனனே
வாடுமகிழ்ந் தாடுமெமதையனைப் பாம்பெனனவின்று
மாடுமகிழ்ந்தாட்டுதிதோ வந்து. (கச)

கலித்துறை

வந்தித்திடு தினம்வாழ்த்துபஞ்சாக்கர மந்திரத்தைச்
சிந்தித்திடு திருப்பேரூர்வணங்கிச்சிவனையுள்ளே .
பந்தித்திடு தவிராதினனசெய்யி னீபாவி நெஞ்சே
தொத்தித்திடுப்பவப்போர் வெல்லவாய்த்ததுணை யெனக்கே.

ஆசிரியப்பா.

துணையது பிரியாத் துணைதரும் பிடிதம்
மேனிதைவந்திட யானையின் குழாங்கள்
குன்றிடைமத நீர்நின்று சொரிவன
வாங்கதே போலவோங்குமாடத்து
முகிற்குலமவயிற்றைத்துகிற்குலந்தடவத்
தூவாமழையை யோவாது பெய்வன
விவ்விரு நீரதமுமவ்வயி ஞென்றுயக்
கங்கையை யமுனைகலந்த தேப்பத்
தங்கிப் பணையினருணநோக்கி
யாற்றி வளாததுப்போற்றியவள ஞசேர்
மருதவைப் பிடையமாதருதிருப்பேரூர்ப்
படித்தலைத்துறைபட்டிப்பெரும
வுள்ளத் துள்ளேயூறமெறழுமமுதே
கள்ளகருத்திற் கைக்குமின்சுவையே
முப்புவனத்துமொப்பறுமுதலே
யாவருமயாதுமயாவுமானவனே
கரிபரியாதியவுரியவூர்திகளொரீஇ
மூறிவெள்ளேறேறியமாந்ததூஉம
பொற்பட்டாடைநற்றுகிலவையொரீஇக்
கரியுழுவைத் தோற்றரியவுடுத்தூஉஞ
செம்பொற்பணிதிகொளம்பொற்கலனொரீஇ
யென்பொடுசிரமுங்கொம்புமணிந்தூஉங்
கடறரு மமுதைக் கூடவுளர்க்கீந்தொரீஇக்
கடறருங்கொடியகடுவிடமயின்றதூஉந
தூய்மைத்தலனொரீஇயீமத்தமாந்ததூஉ
முணகலனொரீத்தலைவெண்கலனெடுத்தூஉ
மின்னபிறவு நின்னிடைநிகழ்தலிற
நீயவையனைத்துந்தூயவா நின்கருத்
தீக்குணட்பாவிரீயனசெயலு
மேற்குமாற்றகவுடனெனவடுத்தனனே. (கக)

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBR

வெண்பா

தனதாயகத் தமைத்துச் சாற்றுதியேனெஞ்சே
மனதாம் பகையடங்கிவாய்க்கு—முனமேலோர்
செப்பிலககா நத்தினைச் செந்நெறிக்கணுயக்கவல்ல
பிப்பிலக் கானத்த னவனபேர். (கஎ)

கலித்துறை

பனைப்பதியெனஞெருகாற் சொலினமனபேர்க்கணக்கிற்
பனைப்பதியா தகற்றிடுமமல மபேர்த்தவாதம
பனைப்பதியெனவாக்கிடுமவேணடியபேறுதருமம
பனைப்பதியினை யொத்திடுமே கொல் பிறபதியே. (கஅ)

ஆசிரியப்பா

பதியாநீயேதுதிபெறுமுலகா
மல்ல லம்பண்ணையிலெல்லையிலாத
சராசரபேதம விராவுமபயிரொலா
மாக்கியளித்தழித் தூக்கியவுழவினி
லொல்லைபபழமைதமொல்வேருழவு
யுற்றினிதமர்ந்துநறறலபபேரூாப
பண்ணை நோககிடுவான பள்ளனும்வடிவொடு
தண்ணியேருழுதொழினடாத்துபுநோக்கியு
மமையாக் காதலோடுமையாடனையு
மெள்ளலிலாதபள்ளியாய் வரநிறீஇ
வயலிடைநடவுபயிலப்பயிற்றிடிற்
பேரூர்ப்பண்ணையினசீர்சொலற்பாற்றே
யத்தகுபேருரமர்தருவித்தக
முத்தமிழிலக்கணமுனமொழிபுலவ
வென்றுயிர்த்தலைவி னின்னஞ்சிறியளாய்த்
தெருவாவிடத்துனைப் பொருளாக்கொண்டில
னைம்புலச்சிறுவர் செம்பொறிச்சிறுமியர்
கிற்றினஞ்சேர்ந்து சிற்றிலாட்டயர்ந்து

மந்தக்கரணத் தொந்தமிட்டாடிப்
படர்மனக்குரங்கி னடனே ரக்கியுஞ்
சகசாலத்தே யகமகிழ்வெய்தி
முரணடரநடந்தன டெருண்டகாலை
யனைவையொழித்துத தனைநதனியளாய்
நீதரபபெற்ற காதலீரபபத
துனமெறியாகிய பனனெறிகடந்து
தன்னுயிரத்தோழியா மெனணையுமயாத்துப
பேரூரகேட்டுணைப பினைறொடர்ந்துற்றன
ணீவரநதாழ்ககிலாவிதரிககில
ளாதலினவந்தவடபுணர்ந்து
காதலசேரகததுக் கலத்தலுனகடனே. (கக)

வெண்பா

கடனுருநிறகே கலைசோரிறகைககு
முடனுமுபசாரமுண்டோ—மடமையேம்
போதிபபதியாது முற்றுணாந்த புங்கவர்வாழ்
போதிபபதியாய்புகல். (உ0

கலித்துறை

புகலற்றபேர்க்குப் புகலாகும பேரைப்பொருப்பனபினே
பகலற்றபோது சுடுஞ்சுடரம்புலிப்பாய்ச்சலுக்கு
மிகலற்றகாலே வருத்திளங்கா லுக்கு மெய்த்தடைந்தா
ணைகலற்ற நெஞ்சுநினைபபிற்சுடுஞ்சுர நேரிழையே. (உக

ஆசிரியப்பா

நேரிழைகாணச் சீரரசம்பலத்
தொருநட நவிற்றிய திருநடராய
வெள்ளுக்குள்ளே யெண்ணெயொத்துயிரி
னுள்ளுக்குள்ளே யொளித்திடுங்கள்வ
சொல்லரும்பொருளைச் சொல்லாதுணர்த்த

வன்றுகைகாட்டிய வற்புதம்போல
வின்றுமுலகோர்க்கியம்பாதுணர்த்த
வொருகை
பிறந்திறந்துழலும பீழைசகுடைந்தோ
ரிமமெனவிவ்விடை வமமினெனறழைப்ப
வுகேகையசைததுநடத்தவமைத்து
மொருகை
யங்ஙனம்போந்தவாருயிர்த்திரள்கட்
கெங்கனு மச்சமில்லையெனறு
மஞ்சதலொழிக்க நெஞ்சகததமைத்து
மொருகை
யையநெஞ்சத்து வையத்தீரே
யித்திறமுற்றுஞ் சத்தியமெனனற்
கழல்சானருக்கித் தழல்கொளவமைத்து
மொருகை
யிடர்தவிர்ந் திருப்பதெங்ஙனென்றெண்ணலிர்
படர்மினிநதப் பதநிழருனே
னீட்டின்பாற்றெனக் காட்டவமைத்து
மின்னவண்ண நினனருட்குறிப்பைக்
கைக்குறிப்பதனன் மெய்க்குறிப்புணர்த்திய
வக்குறிட்புணர கிறகிலேனுயினன்
குறிப்பிற்குறிப்புணரா வாயினுறப்பினு
ளென்னபயத்தவோ கண்ணெனமேலோர்
சொல்லளவாய்க் கண்ணில்லேனுதலிற்
பல்சமயக்குழி யில்விழுந்தழல்வேன
குழியிடைவீழும் விழியிலாமாக்களைக்
கோல்கொடுத்தழைப்பதே போல்வந்தெனக்குத்
திருவருட்கோல் கொடுத்தீர்த்துன்
னருகுறவிரப்பணித்தாண்டருளுதியே. (உஉ)

வெண்பா

அருள்சேரவேண்டுதிரேல் வம்மினஞ்ஞானத்
திருள்சேரவேண்டுதிரேலெய் தி—மருவன்மின்
வானக்கோனறன பழியையமாறறவுலலபேரூராம்
ஞானககோமுத்திநகாககு. (௨

கலித்துறை

நகரபபொருளொடு நாட்டுபபொருளு நவையறுசீர்
மகரப்பொருளுள வாரிப்பொருளுமவளமலிந்த
சிகரபபொருளுடன யாவுஞ்செறிந்து சிவனெனவே
யகரபபொருளுடன் பேரூரமர்ந்ததிசயமே. (௩

ஆசிரியப்பா

அதிசயவளஞ்சேர் பதிபலவற்றினுந்
தலைமைபடைத்துயர் நிலைமையுடைத்தா
யாரூரண்ணற் கருணடங்காட்டிய
பேரூரமர்தருபிறை மூடிபபெரும
மாயவன வேதவியாதனுங்காலை
மாயையின வலியால் வாரணசியினிற்
பொய்மொழி பிதற்றிய புன்மைதீர்த்தவற்குக்
கையொடு நாவையு மொய்யெனவழங்கிய
பெருங்கருணைத்திறம் பெட்பினோக்கி
யருங்கதிநல்கு மரசவனத்தில்
வாதராயணனென்ன மருவுநனபெயரொரீஇ
வரதராயணனெ வண்பெயர்நிறீஇத்
தேசுறுமேலாஞ் சிவவிரதங்களை
மாசறுமடியா வழிபடுமத்தினத்
தொருநாண்முந்தி யுணற்றுதல்போல
விருநாண்முந்தி யிருந்துபவசித்
தாவறீர வேவல்செய் தமர்ந்தன
னன்னவனடியரது கடைப்பிடித்தே

யினனமுஞ்சிவ விரதங்கள வந்தெதிரபபடு
மாதங்கிழமை யாதித்திதிமுன
னிவ்விருநாளென வெய்திடுநாளே
திவ்வியநாளெனத் தோந்துகொணடாடுவர்
மாதவபபெயரிய மாயவனசெய்சிவ
பாதகநீக்கிய பணபுகணடியாறுும
பலபலபிறவியிற பாவமபுரிந்தவை
சிலவலவவையெலாந் தீாத்திடற்பொருட்டாய்
வநதினிதுற்றனனபேரூ
ரெந்தையுன்னடியிணையேன்றுகொளளெனயே.(௨௫)

வெண்பா

கொள்ளும்பிறவியினிற குபபுற்றுழல்வதையும்
விள்ளுமபடியடையும வீட்டினையு—முளளுணர
ஞானநோககமபெறலா நாளும்பேரூர்ப்போதிக
கானநோக்கப் பெற்றக்கால் (௨௬)

கலித்துறை

காலொன்று வெஞ்சமனபோய்விழச் சாய்த்ததுகானமுளை [யாய்
வேலொனறுகையிணைப்பெற்றது வேதமெனற்குரிய
நூலொனறு சொற்றதுமாலயன றேடியுநோககரிதாய்ப்
பாலொன்று மாதினைவைத்தது பேரைபபழம் பொருளே.
(௨௭)

ஆசிரியப்பா

பொருள்தேர் வேதப்பூசுரராகிய
மருள்தீர்தில்லை வனத்தமரந்தணர்
மூவாயிரவரு முந்துவணங்கிய
தேவாவழகிய சிற்றம்பலவா
வுலகிறசிவதல முள்ளவைக்கெல்லாந்
திலகமாகத் திகழ்தருபேரூர்
மற்றத்தலத்தின மன்னெனப்படுமா

MAHAMAHOPADHYAYA

பேரூர்மும்மணிக்கோவை

வெற்றத்திறமேனி வெவ்வெத்தலத்தும்
பாதிரிகடம்பு பனிமலர்ச்சண்பக
மாதவிபுன்னை மந்தாரமமகிழ
தில்லையிலநதை சீர்க்களாமருது
விலலநாவல விரவியவனனியா
மொவவொருமரனே யுரித்தெனப்படுமல
திவவெலாமரனு மியங்கியமர்ந்துழி
யரசுசெலுத்தலினரசெனப் பெயரிய
வரசகானை மவறறினுக்கிலதே
பேரூராரசெனப் பேசுவதல்லது
சிறறூரரசெனச் செபபவுமபடுமோ
காஞ்சிசூழவைபபாய்க் கருத்திற்கருதரி
தாஞ்சிவராஜ தானியாகையினு
லததகுபட்டி யத்தாணிமிசையமர்
வித்தகவென்முறை விளம்ப வந்தடைந்தேன்
கருவழிபபட்டிவண் வருவதன்முன்னர்
யானுறுதுனபமானவையுணர்கிலே
னைந்தாண்டளவையினடைநததுனபு
மர்தோசிறிதே யறிகுவனதனபின
மலசலத்திரளால் வருபலநோயாற்
கலைபயிறறாத்தாற் பலவினைப்பரபபால்
வருநதுறுபசியா லருந்தல்பொருந்தலாற்
றீமைசெயமனமாதிகளால்வாககாற்
காமக்குரோத மோகாதிகளாற
பஞ்சபூதத்தாற் பல்லுயிரத்திரளா
லெஞ்சலில் கிரகாதிகள்செயுமிடக்காற்
பருவம்வளரப பருவரல்வளர்ந்தே
யிருதலைக்கொள்ளியெறும் பொத்துழன்றேன
ருயினுமினிய தயாபரநின்பா
லாயவையனைத்து மகற்றுதற்பொருட்டு
வருந்தியதிறனெலாம் வழாதெடுத்தியம்ப
வருந்திறமிலலேனறை யமாறெங்ஙன்

பேசறகறியாப் பிள்ளைதன் றுயரமு
மாசைப்பொருளு மழுகையாற்காட்டி
மொழிர்றிடாவாறேபோல
மொழிநதுடவறிகிலனமுறறுமென்முறையே. (உஅ)

வெண்பா

முறைசேர் திவாகரனுர் முனனிருளுக்குண்டோ
வுறைபமுறையுளுரையாய்—நிறைமனமே
பச்சைவல்லி சுற்றுமொரு படிவரப்பெற்றக்கா
லிச்சைவல்லி சுற்ருதினி. (உ௯)

கலித்துறை

சுற்ருய்மதில்புடை சூழ்பேரையான்வந்து தோன்றுதற்குச்
சற்ருயினுமினித்தாழ்க்கிலனீங்குச் சகுனம்பல
வற்ருலுமனனதுணர்ந்தனனுள்ள மகிழ்சிறப்பப்
பொற்ருதுகுத்துமலாமாரிபெய்தது பூம்பொழிலே. (௩௰)

பேரூர் மும்மணிக்கோவை

முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

பிரகடன பத்திரிகை

கோயமுத்தூர்க் கலாநிதி அச்சுக்கூடத்தில்

அச்சிட்டான புத்தகங்கள்.

பேரூர் மும்மணிக்கோவை .	௦ ௨ ௦
கோயமுத்தூர்க் கோட்டைச் சங்கமேசர் பதிகம் / அகிலாண்டநாயகி பதிகம்	௦ ௦ ௬
சண்முகநாதர் பதிகம் .	௦ ௦ ௩
திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்மாலை	௦ ௦ ௬
திருநாவுக்கரசு நாயனார்மாலை	௦ ௦ ௬

அச்சிட்டுவரும் புத்தகங்கள்.

கரூர் புராணம்
பவானிக்கூடல் புராணம்
அவிநாசிபுராணம்
கருணாம்பிகையம்மைபிள்ளைத்தமிழ்
பேரூர் பச்சைநாயகியம்மைபிள்ளைத்தமிழ்
பேரூர் மரகத மஞ்சரி
பேரூர் கோவை
பேரூர் அரசம்பல விருத்தம்
பேரூர் பள்ளு
பேரூர் கிள்ளைவிடுதூது

பிழைதிருத்தல்

பக்கம்	வரி	பிழை	திருத்தல்
௭	௫	மருப்புக்காஞ்சி	மருங்குற்காஞ்சி